DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.06/2023**

**Deposition of Witness for Prosecution : P.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜிவ்காந்தி | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 29.01.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தெற்கு பொய்கைநல்லூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னால் சாட்சி சொன்ன மணிகண்டன் எனது நண்பர் ஆவார். 17.08.2022 தேதி அன்று இரவு 8.30 மணியளவில் எனது நண்பர் மணிகண்டன் போன் செய்து தொழில் சம்மந்தமாக பணம் கேட்பதற்கு மனோகரனை ஆப்பிசில் சென்று பார்க்க வேண்டும் என்று சொன்னார். நானும் வருகிறேன் என்று சொன்னேன். அவர் எனது வீட்டில் வந்து என்னை இருசக்கர வாகனத்தில் கூப்பிட்டு கொண்டு சென்றார். நாங்கள் எங்கள் ஊரில் இருந்து வேளாங்கண்ணி நோக்கி சென்று கொண்டு இருந்தோம். வேளாங்கண்ணி சிவன்கோவிலில் செல்லும் ஒரு சந்து இருந்தது. அந்த சந்து லைட் வெளிச்சமான பகுதி. எங்கள் ஊரை சேர்ந்த கிரேட்டன், ஆகாஷ் அவர்களுடன் 6 நபர்கள் அங்கு நின்று கொண்டு இருந்தார்கள். அப்போது எனது நண்பன் மணிகண்டன் பைக்கை நிறுத்தி கிரேட்டனிடம் ஏப்பா இங்கு கூட்டமாக நிற்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு கிரேட்டன் வேளாங்கண்ணியை சுற்றி பார்க்க எனது நண்பர்கள் சென்னையில் இருந்து வந்துள்ளதாக சொன்னார். நான் நேரமாவதானால் வாங்கள் போவோம் என்று மணிகண்டனை

கூப்பிட்டேன். கிரேட்டன், ஆகாஷ் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர்கள் நீதிமன்றத்தில் இல்லை. மற்ற 6 பேரும் நீதிமன்றத்தில் உள்ளார்கள். குற்றவாளி கூண்டில் நிற்க்கும் 6 நபர்கள்தான் அங்கு இருந்தவர்கள். (நீதிமன்ற கேள்வி அடையாளம் காட்டிய எதிரிகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அர்ஜுன், பன்னீர்செல்வம், காசி, சக்திவேல், சூரியபிரகாஷ், சுசிந்தர் எதிரிகள் அவர்கள் பெயரினை சொன்னார்கள்.) அதன் பிறகு சிவன் கோவிலில் இருந்து நாங்கள் முச்சந்தி போனோம். முச்சந்தி நின்று பார்த்தால் மனோகரன் ஆப்பிசில் ஆல் இருக்கிறதா இல்லை என்று தெரியும். அவர் அங்கு இல்லை என்று தெரிந்து கொண்டோம். அதனால் ஆர்ச்சிக்கு சாப்பிட சென்றுவிட்டோம். அங்கு ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு திரும்பி இரவு 9.30 மணியளவில் முச்சந்தி வந்தோம். மனோகர் அலுவலகத்திற்கு எதிராக ரோட்டிற்கு வடபுறம் கீழக்கு புறமாக இபி போஸ்ட் உள்ளது அதன் அருகில் வண்டியை நிறுத்திவிட்டு ரோட்டை கடக்க ரோட்டில் நின்று கொண்டு இருந்தோம். அப்போது ஏற்கனவே பார்த்த 8 நபர்கள் மனோகர் ஆப்பிஸ் அருகே பைக்கில் வந்து நின்றார்கள். நின்ற வேகத்தில் 4 நாபர்கள் கிரேட்டேன் 2 அடி நீளம் உள்ள கூர்முனை இல்லாத அரிவாளை எடுத்து கொண்டு 4 நான்கு நபர்களும் ஆபிசிற்குள் சென்றார்கள். அந்த அரிவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் அரிவாள்கள் தான் மனோகரனை வெட்ட பயன்படுத்தியது ஆகும். அது **சா.பொ.4, 5, 6, 7** ஆகும். 4 நபர்களும் மனோகரன் உட்கார்ந்து இருந்த இடத்திற்கு அருகே சென்று அவரை 4 பேரும் மாறி மாறி வெட்டினார்கள். அவர் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார். அவருக்கு எதிரே அவரது மேனேஜர் உட்கார்ந்து இருந்தார். அதில் இரண்டு நபர்கள் அவரையும் வெட்டினார்கள். அவரை கையில் வெட்டினார்கள். வெட்ட சென்ற 4 நபர்களில் ஒருவருக்கு உள்ளங்கையில் வெட்டுப்பட்டது. அவர்

கையில் வைத்திருந்த அரிவாளை அங்கே போட்டுவிட்டு கையில் இரத்ததுடன் வெளியே வந்துவிட்டார். பிறகு மூன்று நபர்களும் அரிவாளுடன் வெளியே வந்தார்கள். வெளியே பைக்கில் நின்று கொண்டு இருந்த 4 நபர்களுடன் சென்றார்கள். வெட்டுபட்டவர் ஆகாஷ் பைக்கில் ஏறி சென்றார். அது TN 51 AQ 8007 வெள்ளை ஆரஞ்ச் டியூக் பைக்காகும். மற்ற மூன்று பேரும் மற்ற வண்டிகளில் மாறி மாறி ஏறி சென்றாகள். அதில் ஒரு வண்டி பிளாக் கலர் ராயல் என்பில்ட் TN 51 AB 9444, மற்றொரு வண்டி யமகா ஆர்.15 TN 05 CD 1409, வெள்ளை கருப்பு டியூக் பைக் அதில் நம்பர் பிளேட்டில் நம்பர் இல்லை. பைக்கில் ஏறி சாலையின் மேற்கு பக்கமாக சென்றுவிட்டார்கள். எங்களுக்கு பதட்டமாயிவிட்டதால் நாங்கள் கிழக்கு பக்கம் சென்றுவிட்டோம். இது சுமார் 9.30 மணிக்கு நடைபெற்றது. அதன் பின்னிட்டு அரைமணி நேரம் கழித்து வந்து பார்த்தோம். அங்கு வந்து பார்த்த போது மனோகரை ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். நானும் மணிகண்டனும் இரவு GH க்கு போனோம். அங்கு மனோகரன் இறந்துவிட்டதாகவும், அவருடன் இருந்த மணிவேல் GHல் சிகிச்சை பெற்று கொண்டு இருப்பதாகவும் சொன்னார்கள். அவருடைய சகோதரர் ரமேஷ்குமார், மணிவண்ணன், அவரது அப்பா எல்லோரும் இருந்தார்கள். அவர்களிடம் நடந்த விவரத்தை சொன்னோம். அவர்கள் வேளாங்கண்ணி ஆய்வாளரிடம் சொல்ல சொன்னார்கள். நாங்கள் அங்கு இருந்த ஆய்வாளரிடம் விவரத்தை சொன்னோம். அதன் பிறகு நீதிமன்றத்தில் வந்து வாக்குமூலம் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இரண்டாவது எதிரியின் தரப்பில் 164(3) பிரிவு குவிமுச சாட்சியம் ஒத்திசைவதற்காக முழுமையாக குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபிக்கப்படுகிறது.) அதற்கு பின்பு புதுக்கோட்டை ஜெயிலுக்கு சென்று அடையாளம்

காண்பித்தோம். நான் இரண்டு பேரை அடையாளம் காண்பித்தேன். மற்றவர்களை ஏன் அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் அங்கு பார்க்கும் போது தாடி, மீசையுடன் இருந்தார்கள். புதுக்கோட்டையில் முடி வெட்டி கொண்டு கிளின் சேவ் செய்திருந்ததால் என்னால் அடையாளம் காட்டமுடியவில்லை. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1, 10, 11, 12, 14, 16 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**
**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**5வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**6, 7 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**8வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. (அமர்வு வழக்கு எண். 33/2024 ).**
**9வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. (அமர்வு வழக்கு எண். 64/2023 ).**
**13வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**15வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**17வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**18வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.06/2023**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 29.01.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பரவை தெற்குபொய்கைநல்லூரில் வசித்து வருகிறேன். இறால் பண்ணை லீசுக்கு எடுத்து நடத்தி வருகிறேன். 17.08.2022 அன்று 8.00, 8.30 மணி வாக்கில் எனது நண்பர் ராஜிவ்காந்தி அவருக்கு போன் செய்து வேளாங்கண்ணி மனோகரிடம் பணம் வாங்க வேண்டும் என்று சொல்லி எங்கே இருக்கீறிங்க என்று கேட்டேன். அதற்கு அவர் வீட்டில் இருக்கிறேன் வாங்க போவோம் என்று சொன்னார். அவரை வீட்டிற்கு சென்று அழைத்து கொண்டு வேளாங்கண்ணிக்கு சென்று கொண்டிருந்த போது வேளாங்கண்ணி சிவன் கோவில் சின்ன பாதை அருகில் லைட் போஸ்ட்டுக்கு கீழ் கிரேட்டன், ஆகாஷ் மற்றும் 6 நபர்கள் நின்று கொண்டு இருந்தார்கள். கிரேட்டனிடம் ஏன் இங்க நின்று கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் கூட இருப்பவர்கள் யார் என்று கேட்டேன். சென்னை சேர்ந்த நண்பர் வேளாங்கண்ணியை சுற்றி பார்க்க வந்துள்ளார் என்று சொன்னார். நான் கூறிய கிரேட்டன், ஆகாஷ் நீதிமன்றத்தில் இல்லை. மற்ற நபர்கள் நீதிமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்களை என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டமுடியும். சாட்சி கூண்டில் உள்ள எதிரிகளை அடையாளம்

காட்டினார். (நீதிமன்ற கேள்வி அடையாளம் காட்டிய எதிரிகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அர்ஜுன்,பன்னீர்செல்வம்,காசி, சக்திவேல், சூரியபிரகாஷ், சுசிந்தர் எதிரிகள் அவர்கள் பெயரினை சொன்னார்கள்.) அதன் பிறகு எனது நண்பர் ராஜு கிளம்புவோம் என்றார் கிளம்பினோம். நேராக வேளாங்கண்ணி முச்சந்தி சென்று பார்த்தோம் மனோகர் இல்லை. முச்சந்தியில் இருந்து பார்த்தால் ஆபிஸ் தெரியும். கடை சாத்தியிருந்தது. அவரது வண்டி இல்லை. அதன் பிறகு ராஜிவ்காந்தி வேளாங்கண்ணி ஆர்ச் போய் சாப்பிட்டுவிட்டு வருவோம் என்று சொன்னார். அதன் பின்னிட்டு நாங்கள் சாப்பிட்டுவிட்டு மனோகரன் ஆப்பிசிற்கு வந்தோம். அப்போது நேரம் சுமார் 9.00, 9.15 இருக்கும். இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு வடக்கில் இருந்து ரோட்டை கிராஸ் செய்து வந்தோம். அப்போது நான்கு வண்டி வந்தது. புல்லட் TN 51 AB 9444, ஆரஞ்ச் ஒயிட் கேடிஎம் TN 51 AQ 8007, ஆர்.ஒன்.5 அதன் எண் தெரியவில்லை, மற்றொரு பைக்கின் எண். TN 09 CD 1409 ஆகிய நான்கு வண்டியில் வந்தார்கள். வந்தவர்களில் 4 பேர் மனோகரன் ஆபிஸ்குள் சென்றார்கள். அவர்கள் வைத்திருந்த அரிவாளை வைத்து வெட்ட ஆரம்பித்தார்கள். நான்கு பேர் வெட்டி கொண்டிருந்த போது வெட்டியவர்களில் ஒருவர் அரிவாலை போட்டுவிட்டு வெளியே ஓடி வந்தார். மற்ற 3 பேரும் மனோகரனை வெட்டினார்கள். மனோகர் சரிந்து விழுந்தார். அப்போது எதிரே இருந்த மணிவேலையும் வெட்டினார்கள். வெட்டிவிட்டு வெளியே வரும் போது கிரேட்டனின் மாஸ்க் கிழே விழுந்தது. அது போல் இன்னோருவர் குல்லாவும் கீழே விழுந்தது. என்னிடம் காட்டப்படும் அரிவாள்கள் இந்த மாதிரியான அரிவாள்கள் தான். அதன் பிறகு நின்று கொண்டிருந்த வண்டியில் எல்லோரும் மேற்க்கு பக்கமாக சென்றுவிட்டார்கள். அதன் பிறகு நாங்கள் பயந்து கொண்டு கிழக்கு நோக்கி சென்றுவிட்டோம். அதன் பிறகு அரைமணி நேரம் கழித்து

அங்கு வந்தோம். சம்பவம் நடந்த போது நேரம் 9.00 இருந்து 9.30 மணி இருக்கும். அதன் பிறகு நாங்கள் அரைமணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்க வந்தோம். நாங்கள் வந்த போது GHக்கு அழைத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். அதன் பிறகு நாங்கள் GHக்கு சென்றுவிட்டோம். அங்கு ரமேஷ்குமார், மணிவண்ணன், அவரது தந்தை இருந்தார். அவர்களிடம் நடந்த விவரத்தை ரமேஷ்குமாரிடம் சொன்னேன். அதன் பிறகு GHல் என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார். அதன் பிறகு புதுக்கோட்டைக்கு ஆட்களை அடையாளம் காட்ட அழைத்து சென்றார்கள். அங்கு நான் 3 நபர்களை அடையாளம் காட்டினேன். நான் பார்த்த போது தாடி மீசையுடன் இருந்தார்கள். புதுக்கோட்டையில் பார்க்கும் போது தாடி, மீசை இல்லாமல் சேவ் செய்து இருந்தார்கள். அதனால் மற்ற 3 நபர்களை அடையாளம் காட்ட முடியவில்லை. நான் குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலம் தான். என்னால் குற்றவியல் நடுவரிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இரண்டாவது எதிரியின் தரப்பில் 164(3) பிரிவு குவிமுச சாட்சியம் ஒத்திசைவதற்காக முழுமையாக குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபிக்கப்படுகிறது.) என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**1, 10, 11, 12, 14, 16 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**
**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**5வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**6, 7 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**8வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. (அமர்வு வழக்கு எண். 33/2024 ).**

9வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. (அமர்வு வழக்கு எண். 64/2023 ).

13வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

15வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

17வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

18வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**Sessions Case No. 06/2023**

**நாள்:** 29.01.2025

**பெயர் : ரமேஷ்**

**PW1**

**<u>3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 2/145, வடக்கு தெரு, தெற்கு பொய்கைநல்லூர் முகவரியில் பிறந்ததில் இருந்து வசித்து வருகிறேன். நான் இறால் பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போனவர் எனக்கு இரண்டாவது சகோதரர் ஆவார். அவர் இறால்பண்ணை வைத்திருந்தார். அவர் பைனான்ஸ் நடத்தி வந்தார். அதன் பெயர் டி.வி.ஆர் பைனான்ஸ் ஆகும். அவர் 10 ஆண்டுகளாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் மீது ஒரு குற்ற வழக்கு இருந்தது. அவர் அரசியல் கட்ச்சில் இல்லை. நான் அரசியல் கட்ச்சியல் உள்ளேன். 17.08.2022 அன்று அலுவலகத்திற்கு அவர் சென்று இருந்தார். என் மீது ஒரு வழக்கு உள்ளது. அது முடிந்துவிட்டது. அந்த வழக்கு தவிர எனக்கு வேறு வழக்கு கிடையாது. எனது சகோதரர் அலுவலகத்தில் மணிவேல் என்பவர் வேலை பார்க்கிறார். அந்த பைனாஸ் முறையாக பதிவு செய்யப்பட்டதா என்றால் முறையாக பதிவு செய்யப்பட்டது தான். 3வது எதிரி ஆகாஷ் எனது உறவினரா என்றால் உறவினர் தான். ஆகாஷ் தந்தைக்கும் எனக்கும் முன்பு பேச்சு வார்தை உள்ளதா என்றால் உள்ளது. 3ம் எதிரி ஆகாஷிடம் முன்பும் பேச்சு வார்த்தை கிடையாது. முன் விரோதம் இருந்ததால் பேச்சு வார்தை கிடையாது. ஆகாஷ்க்கும் இறந்து போன எனது தம்பிக்கும் முன் விரோதம் இருந்தது. இதற்கு முன்பு புகார் எதுவும் கொடுத்தோம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 17.08.2022ம் தேதி அன்று எனது தம்பியுடன் வேலை பார்க்கும் மணிவேல் என்பவர் இரவு 9.30 மணிக்கு எனக்கு போன் செய்தார். என்னிடம் அவர் கிரேட்டன் அவருடன் 3 நபர்கள் எனது சகோதரர் அலுவலகத்தில் புகுந்து எனது தலைவன் அப்பான் மகேஷ்வரனை பகச்சிகிரிங்களாட என்று சொல்லி மனோகரனை வெட்டிவிட்டு என்னையும் வெட்டிவிட்டார் என்று சொன்னார். சம்பவம் கேள்விபட்ட போது நான் வீட்டில் இருந்தேன்.

நான் கேள்விபட்ட உடன் அந்த இடத்திற்க்கு சென்றுவிட்டேன். அந்த இடம் என் வீட்டில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கிருந்து நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு எனது சகோதரனை அழைத்து சென்றேன். அப்போது என்னுடன் அப்பா, தம்பி மணிவண்ணன், சரவணன் என்கிற நண்பர் என்னுடன் மருத்துவமனைக்கு வந்தார்கள். மருத்துவமனையில் வந்து காவல் துறையினர் புகாரினை பெற்று கொண்டனர். முதல் தகவல் அறிக்கை பதிவு எப்போது பதிவு செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவருடன் வேலை செய்த மணிவேல் என்பவரும் அதே மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். எனது தம்பி மீது 3, 4 வழக்குகள் உள்ளதா என்றால் தெரியவில்லை. புகாரில் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று சொல்லவில்லை. சாட்சி பின்னர் என்ன தொழில் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 3வது எதிரி கட்சியில் உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. தேர்தல் நேரத்தில் முன்விரோதம் இருந்து வந்தது. தேர்தல் சமயத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டு அது வழக்காக மாற்றப்பட்டு அது முடிந்துவிட்டது. 3வது எதிரி புகார் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பரவை காய்கறி சந்தை மாற்றம் சம்மந்தமாக எங்களுக்கும் அப்பானுக்கு பிரச்சனை ஏற்பட்டது. அதனால் இரு தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. எனது வீடும் 3வது எதிரியின் வீடும் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. நான் அவரை தினசரி 3வது எதிரியை பார்க்கமுடியுமா என்றால் இல்லை. மணிகண்டனும், ராஜிவ்காந்தியும் அரசு மருத்துவமனையில் நான் இருந்த போது 3வது எதிரி மற்றும் கிரேட்டன் அவருடன் 5, 6 நபர்கள் வேளாங்கண்ணி சிவன் கோவில் சின்ன பாதை அருகே விளக்கு வெளிச்சத்தில் பார்த்ததாக தெரிவித்தார்கள். 8.30 மணியளவில் பார்த்ததாக கூறினார். அவர்களை பார்த்து என்னப்பா இங்கு கூட்டமாக நிற்கிறீர்களே என்று கேட்டார்கள். அதற்கு 3வது எதிரி மற்றும் கிரேட்டன் ஆகியோர் சென்னையில் இருந்து நண்பர்கள் வந்துள்ளார்கள் அவர்களிடம் பேசி கொண்டு இருக்கிறோம் என்றும் மணிகாண்டன், ராஜிவ்காந்தியிடம் சொன்னார்கள். மணிகண்டனும், ராஜிவ்காந்தியும் சொன்னதன் அடிப்படையில் நான் புகார் அளித்துள்ளேன். ராஜிவ்காந்தியும், மணிகண்டனும் சொன்னதன் அடிப்படையில் ஏற்கனவே 3வது எதிரி

மீது முன்விரோதம் இருந்த காரணத்தினால் வழக்கில் தொடர்பில்லாத 3வது எதிரியை மணிகண்டனும்,ராஜிவ்காந்தியும் சொன்னதன் அடிப்படையில் பொய்யான அடிப்படையில் 3வது எதிரியை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.